7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) முதல்வரின் ஆலயப் பாதுகாப்பு நிதிக்கு நிதி வழங்கிய உறுப்பினர்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு இன்னொரு முக்கிய அறிவிப்பு. நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலயப் பாதுகாப்பு நிதிக்குப் பல்வேறு உறுப்பினர்கள் மனமுவந்து நிதி வழங்கிய சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இன்றைக்கு மிகக் குறிப்பிட்ட ஒரு அம்சம், தமிழகத்தின் சமயப் பொறையுடைமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிற வகையில் கோயில் நிதிக்கு என்று, திருமதி பிட்ரிக்ஸ் டி: சோசா அவர்களும், டாக்டர் ஜெ. பரந்தாமன் அவர்களும், திரு. கி. தருமலிங்கம் அவர்களும் முறையே ரூ. 6,250, ரூ. 6,250, ரூ. 2,750 என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நிதி வழங்குமாறு என்னிடத்திலே வழங்கி இருக்கிறார்கள். அது இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்து சமயத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இத்தகைய நன்கொடை கொடுப்பதிலே எனக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், வேறு மதத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்து சமயத்தை இந்த அளவு மதித்து, இந்து சமய ஆலயங்கள், கோயில்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த நிதியினை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் என்னுடைய மகிழ்ச்சி பன்மடங்கு அதிகரிக்கிறது என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றும், இன்றும் மட்டும் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐம்பது ரூபாய் ஆகிறது மொத்தத் தொகையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் ஏகப்பட்ட உறுப்பினர்கள் கை தூக்கினீர்கள். இன்னும் 'செக்' வரமாட்டேன் என்கிறது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும் . வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.